நினைவூட்டு – 1

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந. க. எண் 4015 / ஆ5 / 2018 நாள் –11–2018

பொருள் வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகம் – வினாவங்கி ஏடுகள் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி நூலகத்திற்கு வழங்குதல் – உரிய தொகை செலுத்த கோருல் சார்பு.

பார்வை 1. சென்னை தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர் அவர்களின் கடித ந.க.எண் 550 / அ / 2018 நாள் 27–08–2018
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம்

•••••••

பார்வையில் 1ல் காணும் சென்னை தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர் அவர்களின் கடிதம் மூலம் பெறப்பட்ட அறிவுரைகள் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக 10 மற்றும் 12ம் வகுப்பு வினா வங்கி ஏடுகள் இணைப்பில் காணும் விவரங்களின்படி சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு 12–10–2018 அன்று வழங்கப்பட்டது. புத்தகங்கள் பள்ளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு அதற்குண்டான தொகையினை வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் 25–10–2018 அன்று மாலை 03.00க்குள் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இதுநாள் வரை ஐந்து மாவட்டக் கல்வி அலுவலகத்திலிருந்தும் புத்தகங்கள் விற்பனை செய்தமைக்கான தொகை வழங்கப்படவில்லை என்பது வருத்தப்படவேண்டிய செயலாக உள்ளது. மேலும் புத்தகங்கள் விற்பனை செய்தமைக்கு தங்கள் அலுவலகம் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கை மற்றும் இதுநாள் வரை உரிய தொகை வழங்கப்படாததற்கான காரணத்தினை 07–11–2018 அன்று மாலை 03.00 மணிக்குள் தனிநபர் கடிதம் மூலமாக தெரிவிக்கப்படவேண்டும் என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதுநாள் வரை விற்பனை செய்தமைக்கான தொகையினை உடன் இவ்வலுவலகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்
மாவட்டக் கல்வி அலுவலர்கள்
அரக்கோணம் / இராணிப்பேட்டை / வேலூர்
வாணியம்பாடி / திருப்பத்தூர்

நகல்
தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழக செயலாளர்,
சென்னை அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.